விலை ரூபா 1·25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 மார்கழி 21 ரபி. ஆகி 1 இதழ் 324
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 5-1-84

### நிகழ்ச்சிநிரல் பிரச்னை தீராவிட்டால்

# சென்னை திரும்பிவிடுவேன்!

## மீனம்பாக்கம் விமான நிலையத்தில் 'அமிர்'

(சென்னை)

''உத்தேச சர்வகட்சி மகாநாட்டு நிகழ்ச்சி நிரல் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எழுந்துள்ள சந்தேகங்கள் தீர்க்கப்படாவிட்டால் கொழும்பு செல்லும் நான், இரண்டு மூன்று தினங்களில் அங்கிருந்து சென்னைக்கு மீண்டும் திரும்பி வந்துவிடுவேன்'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நிருபர்களிடம் கூறினார்.

கொழும்புக்குப் புறப்படுவதற்கு முன்னதாக நிருபர்களிடம் அவரும், தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும் பேசினர்கள்.

உத்தேச சர்வகட்சி மாநாட்டில் உள்ள நிகழ்ச்சி நிரலில் தெரிவிக்கப்பட்டுள்ள பதினன்கு அம்சத்தில், மூன்று அம்சங்கள் கூட்டணி பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கு 'முட்டுக்கட்டை' போட்டுக் கொண்டிருப்பதாகவும், பார்த்தசாரதி முயற்சி வெற்றி பெற்று தீர்க்கப்படும்

(8-ம் பக்கம் பார்க்க)

# பார்த்தசாரதி, ஜே. ஆருடன் இந்திரா பேசினர்!

[புதுடில்லி]

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கொழும்பில் தற்போது தங்கியிருக்கும் தமது சிறப்புப் பிரதிநிதி திரு ஜி பார்த்தசாரதியுடன் நேற்றுப் பகல் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

நேற்று முற்பகல் பதினொரு மணியளவில் இந்தப் பேச்சு நிகழ்ந்தது.

சர்வகட்சி மகாநாட்டுக்கு முன்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்து கொள்ளக்கூடிய நல்ல சூழ்நிலையை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள திரு. பார்த்தசாரதியுடன் திருமதி இந்திரா காந்தி பேசிய கையோடு, ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் தொடர்பு கொண்டார்.

சர்வகட்சி மகாநாட்டுக்கு முன்னதாக, ஜனாதிபதி ஜயவர்த்தனவையும், தமிழர் கூட்டணித் தலைவர்களையும் கட்சிமட்ட அளவில் சந்திக்க வைத்து, நல்ல சூழ்நிலையொன்றை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை தமது பிரதிநிதி பார்த்தசாரதியிடம் திருமதி இந்திரா வற்புறுத்தியதாகத் தெரியவருகிறது.

இதற்கிடையில், திரு. ஜி. பார்த்தசாரதி ஜனாதிபதி திரு ஜயவர்த்தனவை இரண்டாவது தடவையாக நேற்றுச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தை விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

# கூட்டணி - பார்த்தசாரதி உடனடி பேச்சுவார்த்தை

## சர்ச்சைக்குரிய பிரச்னைபற்றி நீண்டநேரம் உரையாடினர்

### கொழும்பில்பலத்த பாதுகாப்பு நடவடிக்கை

(இ. கந்தசாமி)

இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாணும் முகமாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனவினால் இம்மாதம் 10ம் திகதி கூட்டப்படவுள்ள சர்வகட்சி மகாநாடு தொடர்பாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் விசேட தூதுவர் திரு ஜி. பார்த்தசாரதிக்கு உதவுமுகமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் நேற்று சென்னையிலிருந்து விமானமூலம் புறப்பட்டு பிற்பகல் 1-15 மணிக்குக் கட்டுநாயக்கா விமானநிலையத்தை வந்தடைந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், கூட்டணியின் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், திருகோணமலை முன்னாள் எம். பி. திரு ஆர். சம்பந்தன், திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் திரு. அ. தங்கத்துரை ஆகியோரே நேற்றுக் கொழும்பு வந்து சேர்ந்தவர்களாவர்.

சர்வகட்சி மகாநாடு தொடர்பாகக் கூட்டணியினரின் கருத்துக்களை ஜனாதிபதிக்குத் தெரிவிப்பதற்கு அவர்கள் கொழும்பிலிருப்பது இலகுவாக இருக்குமென்று திரு. பார்த்தசாரதி தெரிவித்திருந்தார். இந்த வேண்டுகோளுக்கிணங்கவே கூட்டணித் தலைவர்கள் சென்னையிலிருந்து இலங்கைவந்து சேர்ந்துள்ளனர்.

சுமார் ஐம்பது நிமிடம் தாமதித்து விமானம் வந்துசேர்ந்தது. பகல் 1-15க்குக் கூட்டணித் தலைவர்கள் விமான நிலையத்தில் நுழைந்தபோதிலும் அவர்கள் வெளியேவரும்போது பகல் 2-10 ஆகிவிட்டது.

ஒரிருவரின் கடவுசீட்டு பிரச்னை தொடர்பாகவே இத்தாமதம் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

#### எம். ஜி. ஆர். கருணாநிதியுடன் ஆலோசனை

கொழும்பு திரும்ப முன்னர் திரு. அமிர்தலிங்கம் இலங்

(8ம் பக்கம் பார்க்க)

### சிறிமாவை சந்தித்தார்

[கொழும்பு]

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் சிறப்புப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதி நேற்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

### பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியருக்கு இடமாற்றம்!

[கொழும்பு]

பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு இடமாற்றம் வழங்குவதென மந்திரிசபை நேற்று முடிவு எடுத்தது.

குடும்பத்தில் அங்கத்தவர் ஒருவரை இழந்தவர்களுக்கும், கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சொத்துக்களை

8-ம் பக்கம் பார்க்க)

### துரித கடுகதி ரயில்சேவை 8ம்திகதிமுதல் நடைபெறும்

[கொழும்பு]

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையேயான துரித கடுகதி ரயில் சேவை ('இன்ரர்சிற்றி எக்ஸ்பிரஸ்') இம்மாதம் 8-ம் திகதி மீண்டும் ஆரம்பமாகிறது.

(8ம் பக்கம் பார்க்க)

### யாழ். பல்கலைக்கழகத்தில்

# 5-வது நாளாகத் தொடரும் உண்ணவிரதப் போராட்டம்!

(ஏ. வி. மாணிக்கம்)

இடம்பெயர்ந்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள் நடாத்திவரும் உண்ணவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழக 2ம் வருட விஞ்ஞானபீட மாணவ-மாணவிகள் நேற்றுத் தங்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து உண்ணவிரதமிருந்தனர்.

தமிழீழ விடுதலை அணியைச் சேர்ந்தவர்களும் நேற்றைய உண்ணவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

இடம்பெயர்ந்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள் 2ம் கட்ட உண்ணவிரதம் செவ்வாய்க்கிழமை காலை 25 மாணவ-மாணவிகளுடன் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழக சிவன் கோவில் முன்றலில் நடைபெற்றுவரும் இவ்வுண்ணவிரதப் போராட்டத்தில், நேற்று முன்தினம் முழுநாளும் கலந்துகொண்டு உண்ணவிரதமிருந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் நேற்றுக் காலை 9 மணிக்கு உண்ணவிரதத்தை முடித்துக்கொண்டனர்.

(7-ம் பக்கம் பார்க்க)

### மட்டு.பல்கலைக்கழக மாணவர் வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்!

(மட்டக்களப்பு நிருபர் இரா. துரைரத்தினம்)

மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி மாணவர்கள் நேற்றுக் காலை தங்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து சுலோக அட்டைகளுடன் மௌன ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இன்று பல்கலைக்கழக வளவுள் உண்ணவிரதமும் இருக்க முடிவுசெய்துள்ளனர்.

இடம்பெயர்ந்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களின் உண்ணவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்தும், மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் கல்விகற்ற சிங்கள மாணவர் (40பேர்) பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு மாற்றப்பட்டதை ஆட்சேபித்தும் இப்போராட்டங்களை நடத்துவதாக மாணவர்

(8ம் பக்கம் பார்க்க)

### மதத்தலைவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது

[கொழும்பு]

சர்வகட்சி மகாநாடுதொடர்பாக கலந்துரையாடுவதற்காக பௌத்த, இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ, கத்தோலிக்க ஸ்தாபனங்களுக்கும், பௌத்த, இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ, கத்தோலிக்க குருமாருக்கும் ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தன அழைப்பு விடுத்துள்ளார்.

இவர்களுடனான ஜனாதிபதியின் சந்திப்பு இம்மாதம் 7ம், 8-ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றம், விஸ்வஹிந்துபரிஷத், அகில இலங்கை பௌத்த காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் லீக், இலங்கை கத்தோலிக்கதிருச்சபை, இலங்கை மெதடிஸ்த திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை, இலங்கை கிறிஸ்தவ திருச்சபைஆகியவை உட்பட மற்றும்பல ஸ்தாபனங்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

யாழ். ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை, கொழும்பு ஆண்

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

அனுபவமிக்க பிளேட்டின் மெசின் மைன்டர் தேவை. நேரில் வரவும் சித்திரா அச்சகம், இல: 310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 10966

ஆனைக்கோட்டை புகைதின்னி விநாயகர் ஆலயத்துக்கு நற்குணமும், ஒழுக்கமும் பொறுமையுமுடைய சபைக்குக் கட்டுப்பட்டு நடக்கக்கூடிய குருக்கள் தேவை. சுற்றுடலில் இருப்பவர் விரும்பத்தக்கது விபரங்களுக்கு 10-1 84 காலை 10-00 மணிக்கு நேரில் சந்திக்கவும். தலைவர். பரிபாலன சபை, ஆனைக்கோட்டை. 10955

பாவித்த இரண்டு குலவிடமான அல்கத்தின் அல்லது எஸ்லோன்பைப் உடன்தேவை. சீனிவாசகம், சற்குணரட்னம் நாகதுவீபம், இணுவில்தெற்கு. இணுவில். 10952

எங்கள் ஸ்தாபனத்திற்கு 300 சதுரஅடி கொண்ட காரியாலயம் ஒன்று யாழ்ப்பாணத்தில் ஸ்ரான்லி வீதிக்குக்கிட்டுமையாக வேண்டும். விண்ணப்பிக்கவும். இல. 7, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 10935

## வகுப்புகள்

ஒரு மாதகால வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கானிச வகுப்புகள் ஆரம்பமாகின்றன. பயிற்சி முடிவில் வீடு, மற்றும் வர்த்தக தொழில் நிறுவனங்களுக்கு நீங்கள் சுயமாக வயரிங் செய்யக்கூடிய தகைமையையடைவதோடு, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சான்றிதழையும் பெறுவீர்கள். J. E. C. 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 10920

11-ம் திகதி, 1984 க பொ. த. (சாதாரண) தூயகணிதம் தனிப்பட்ட முறையில் குழுக்கள் கற்றுக்கொடுக்கப்படும். J. Thaya, சமுவேல் அன் சன்ஸ் கொம்பனி, யாழ்ப்பாணம். 10954

## CLASSES

Special Listening Comprehension classes. For details contact Victor S. Kiruparaj, 23, 3rd Cross Street, Jaffna 10944

## விற்பனைக்கு

யாழ். மானிப்பாய் பிரதான வீதியில் மகளீர் கல்லூரிக்கு அண்மையில் வீடு கட்ட/வியாபாரம் / தொழில் ஸ்தாபனம் அமைக்க உகந்த 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. த. சபாரத்தினம், கிராமசேவையாளர் கனகசபை வீதி, மானிப்பாய். 10937

எழுதுமட்டுவாள் ரயில் நிலையத்துக்கு அருகில் மூகமாலையில் இருபது ஏக்கர் தென்னந் தோட்டம் விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பரதாரர், 52, ஸ்வமன் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22334. [10936]

## சேவை

நீலப்பிரதி (Blue print)க்கு யாழ்நகரில் சிறந்த ஒரே இடம். "கிறபிக் டிசைனர்ஸ்" 9/2. ஸ்ரான்லி வீதி (பரமேஸ் கோணேஸ் கட்டிடம்) யாழ்ப்பாணம். பெரிய Plan களுக்கும் Copy ஒரே தாளில் எடுத்துக் கொடுக்கப்படும். இரவு பகல் சேவை. Phone: 220 3. 10953

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், தட்டாதெரு, காங்கேசன்துறை வீதியில் புதிதாக அமைக்கப் பெற்ற இரண்டு கடைகளும் வாடகைக்கு கொடுக்கப்படும். விபரம்: கோபால் ரேட்ஸ், 760/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 10958

### கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம் முல்லைத்தீவு
### வெற்றுச் சாக்கு விளம்பரம்

இச் சங்கத்தில் உள்ள பின்வரும் வகையான (5000)ஐயாயிரம் வெற்றுச் சாக்குகள் விற்பனை செய்வதற்குக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் யாவும் பதிவுத் தபாலில் இடதுபக்க மேல் மூலையில் "சாக்கு விற்பனை" எனக் குறிப்பிடப்பட்டு 15-1-1984ம் திகதி நண்பகல் 12-00மணிக்கு முன்பாக தலைவர். கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். விண்ணப்பத்துடன் ரூபா 250/- மீளப் பெறக்கூடிய வைப்பும் செய்யப்படல் வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் கேள்வி கிடைத்து மூன்று நாட்களுக்குள் பொருளைச் சங்க வளவில் இருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். காரியாலய நாட்களில் வெற்றுச் சாக்கினை சங்கத்தில் பார்வையிடலாம்.

### இருப்பிலுள்ள சாக்குகளின் விபரம்

1. பிறிமா, சாக்கு 67 கி.கிரு
2. மாச்சாக்கு 50 "
3. சீனிச்சாக்கு 50 "
4. சீனிச்சாக்கு 100 "
5. அரிசிச் சாக்கு 2½ புசல்
6. அரிசிச் சாக்கு 50 கி. கிரும்.
7. நவதானியம் பெரியவை

பொது முகாமையாளர்

பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், முல்லைத்தீவு
28-12-83. 10907

## பதவி வெற்றிடம்

### கணக்காளர் தரம் 11

கல்வித்தகைமை:
கணக்கியல் பட்டதாரி 1 வருட அனுபவம் அல்லது கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுப் பிரமாணப் படி.

சம்பளம்:
500-00 — 840-00
20-00 X 5 + 30 X 8

விண்ணப்பப் படிவங்களையும் நிபந்தனைகளையும் மற்றும் விபரங்களையும் கேட்டு சொந்த முகவரியிட்ட முத்திரை ஒட்டிய தபால் உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி 21-1-84.

தலைவர்,
சாவகச்சேரி,
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

சாவகச்சேரி,
2-1-84. 10938

### நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை, கைதடி
### பாடசாலைப் பிரவேசம் 1984
### செவிப்புலன் இழந்த பிள்ளைகளுக்கு

சில வெற்றிடங்கள் உள்ளன. 5 அல்லது 6 வயது பிள்ளைகள் மட்டுமே சேர்க்கப்படுவர். வயது கூடியபிள்ளைகள், வெற்றிடம் இருப்பின் விசேட சலுகையாக சேர்த்துக்கொள்ளப்படலாம்.

விழிப்புலன் இழந்த பிள்ளைகளும், பார்வை அதிகம் குறைந்த பிள்ளைகளும் (5வயது முதல் 10வயது வரை) சேர்த்துக் கொள்ளப்படுவர். கூடிய வயதுடையோர் விசேட சலுகையாக சேர்த்துக் கொள்ளப்படலாம்.

விசேட கல்வி, விடுதி வசதிகள் இலவசம். அனுமதி கோர விரும்புவோர் சுயவிலாசமிடப்பட்ட நீள் கவர் அனுப்பிஅனுமதிப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

நிரப்பப்பட்ட படிவங்கள் ஜனவரி 20-ம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல்வேண்டும்.

அதிபர்,
நவீல்ட் பாடசாலை,
கைதடி.

10960

---

கட்டிடங்கள், தொழிற்சாலைகள், வீடுகளுக்கு ஒப்பந்த முறையில் மின் இணைப்பு செய்து கொடுக்கப்படும்.
அத்துடன்
பி.வி.சி. கொண்டியூப் பைப், பி.வி.சி.கேபிள், மெயின் சுவிச், லாம் சேட்ஸ்
ஆகிய மற்றும் மின்சார உபகரணங்களை நிதான விலையில் பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்.

**"வீற்றே ரேட்ஸ்"**

[மின்சார ஒப்பந்தகாரர்]

இல: 4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[10940]

---

## General Manager For Leading Firm In Jaffna

Age: 30 to 50 Years

Experience: Minimum of 5 years in one or more of the following fields in a responsible position:-

(a) Financial Management;
(b) Management of large Staff;
(c) Business Management.

High proficiency in English and Tamil necessary Should reside within Jaffna Municipal Council limits

Salary: Negotiable.

Apply on or before 20th January, 1984, with copies of certificates to:

Advt. No. 10926 C/o EELANADU, JAFFNA.

10926

---

## COMPUTER PROGRAMMING

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் நடாத்தும் வட்டு – தொண்டேயம் தொழிற் பயிற்சி சித்தன்கேணி நிலையத்திலும் யாழ்ப்பாணத்தில் சிறும்பிய்டி ஒழுங்கை மணியம் கட்டிடத்தில் உள்ள நிலையத்திலும்

**14-1-84 சனிக்கிழமை**

**கொம்புயூட்டர் வகுப்புகள்**

ஆரம்பமாகின்றன.

வகுப்புகள் வார இறுதியிலும், விடுமுறை நாட்களிலும் நடைபெறும்.

கட்டணம் ரூபா 1800/-

உடன் தொடர்பு கொள்க:

1. வட்டு. தொண்டேயம் தொழிற்பயிற்சி நிலையம், சித்தன்கேணி.
2. N. சுந்தரராசா, 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[10957]

---

## Wanted Immediately

ANAESTHETIST OR H. O. WITH ANAESTHETIC TRAINING

Applications are being received from Anaesthetists for immediate employment in the Unified Medical Service of the Jaffna Diocese of the Church of South India for Further particulars contact the Acting Medical Superintendent, Green Memorial Hospital, Manipay.

Applications close on 15-01-84.

Acting Medical Superintendent,
Green Memorial Hospital, Manipay.

10947

---

## TELEX OPERATORS

(INTERNATIONAL)

அநேகரின் பாராட்டுதல்களைப் பெற்று நடைபெறும் வகுப்பின் 5-ம் பிரிவு9-1-84 (காலை 9-00)ஆரம்பமாகின்றன.

PRACTICALS IN SAGEM - SPE 5 and SIEMENS TELEX MACHINES

இரு மாதப் பயிற்சி — இருபாலாரும் சேரலாம்.

பிரதான விரிவுரையாளர்
Mr. S KUMARASAMY
ELECTRONICS ENGINEER

சர்வதேச தொலைத் தொடர்பு இயந்திரம் (TELEX MACHINES) செய்முறைக்காகப் பயன்படுத்தும் ஒரே ஸ்தாபனம்

**KEEN INSTITUTE**

(ELECTRONICS DIVISION)

மணியம்ஸ் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, சிறும்பியடி ஒழுங்கை. யாழ்ப்பாணம். [10943]

---

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பு பெற

## அரியதோர் சந்தர்ப்பம்

1. எலக்றிக்கல் இன்ஜினியரிங் டிப்ளோமா
   க. பொ. த. (சாதாரணம்). விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. மோட்டார் றிவைன்டிங்
   க. பொ. த. (சாதாரணம்) 6 பாடங்களில் சித்திபெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
3. எலக்றிக்கல் இன்ஸ்ரோலேசன் (வயறிங்)
   க. பொ. த. (சாதாரணம் 6 பாடங்களில் சித்திபெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
4. எலக்ரோனிக்ஸ் (றேடியோ அன் ரீ வி)
   க. பொ. த. (சாதாரணம்) விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரங்களுக்கு:

உதவிப்பதிவாளர்,

**பட்டப்படிப்புகள் கல்லூரி,**

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# மாநில அரசாங்கம் எதனையும் கவிழ்க்கும் எண்ணம் இல்லை!

## பிரதமர் இந்திரா மீண்டும் உறுதி

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இல்லாத எந்தவொரு மாநில அரசையும் கவிழ்க்கும் எண்ணம்இல்லை என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி மீண்டும் உறுதியளித்துள்ளார்.

மாநில அரசுகள் ஒவ்வொன்றும் தத்தமது பதவிக்காலம் வரை பதவியில் இருக்கவேண்டும் என்பதே தமது விருப்பம் என்றும் திருமதி காந்தி தெரிவித்தார்.

இந்திய - அமெரிக்க உறவுகள் குறித்து கருத்து வெளியிட்ட திருமதி காந்தி இந்தியா எவரையும் சார்ந்துஇருக்காது தனது நன்மைக்காக கொள்கைகள் வகுத்து செயற்படும் என்றார்.

ஜம்மு காஷ்மீரில் இந்திரா காங்கிரஸ் ஆதரவாளர்கள் தாக்கப்பட்டதையும் கடைகள் எரிக்கப்பட்டதையும் வன்மையாக கண்டித்த அவர் அங்குள்ள அரசைக் கவிழ்க்கும் எண்ணமில்லை என்றார். (கு)

# நைஜீரியா ஆளும்சபையாக புதிய இராணுவ மன்றம்!

## 19 அதிகாரிகள் பதவி ஏற்றனர்

லாகோஸ் ஜன 4

நைஜீரியாவின் ஆளும் சபையாக 19 அதிகாரிகளைக் கொண்ட இராணுவ மன்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

புதிய ஆட்சியாளர் மேஜர் ஜெனரல் மொஹமட் பொஸாரியைத் தலைவராகக்கொண்ட இந்த உயர்மன்றத்தில் 19 இராணுவ அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றனர்.

ஏற்கனவே அமைக்கப்பட்ட 16 பேர் கொண்ட அமைச்சரவை உறுப்பினர்களுடன் மேலும் மூவர் சேர்க்கப்பட்டே இந்த உயர் மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆட்சியிலிருந்து கவிழ்க்கப்பட்ட நைஜீரியத் தலைவர் பற்றிய விபரங்கள் மர்மமாகவே இருந்து வந்த போதிலும் நேற்று மாலை அவர் கைவிலங்கிடப்பட்ட நிலை பாதுகாப்பாக லாகோஸ் அருகேயுள்ள விமான நிலையம் ஒன்றுக்கு அவர் கொண்டு செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்சியிலிருந்து கவிழ்க்கப்பட்ட தலைவரின் சகாக்கள் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (கு)

## காஷ்மீர் ஆளும் கட்சியை எதிர்க்க இ. காங்கிரஸ் கோரிக்கை

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீரில் ஆட்சியில் இருக்கும் தேசிய மகாநாட்டுக் கட்சி ஜனநாயகத்துக்கு புறம்பாக செயற்படுவதாக குற்றம் சுமத்தியுள்ள இந்திரா காங்கிரஸ், ஜனநாயகத்தை விரும்பும் அனைவரும் அதனை எதிர்க்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது.

புதுடில்லியில் நேற்று வெளியிடப்பட்ட இந்திரா காங்கிரஸ் அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு கோரியுள்ளது. (கு)

## கிரிக்கெட்வீரர் சப்பல் ஓய்வுபெறுகிறார்

கன்பரா ஜன 4

அவுஸ்திரேலிய கிரிக்கெட் குழுவின் முன்னாள் காப்டன் கிறேக்சப்பல் சர்வதேசகிரிக்கெட் ஆட்டங்களிலிருந்து ஓய்வுபெறுகிறார். (கு)

# தேயிலை ஏற்றுமதி: இந்தியா தடை!

(புதுடில்லி)

உயர்ரக தேயிலையின் ஏற்றுமதிக்கு இந்தியா தடைவிதித்துள்ளது

உலகின் தேயிலைப்பாவனையில் 23 வீதத்தை வழங்கிவந்த இந்தியா தற்போது ஏற்றுமதிக்கு தடைவிதித்திருப்பதால் உலக சந்தையில் தேயிலையின் விலை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?
உங்கள் பிரயாணச்சிட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்துகொள்ள
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குரொஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

போர்த்துக்கல் (PORTUGAL) ஸ்பெயின் (SPAIN) வழியாக
பிரான்ஸ், ஜெர்மனி செல்வதற்கான சகல ஏற்பாடுகள்,
மற்றும் பயணச்சிட்டுக்களை
மிகக்குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL SERVICES (PTE) LTD.
STAGE II MODEL MARKET.
No. 5, 1st FLOOR,
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No. 22065, 22040

# "தமிழ் மாணவர் கல்வியில் பின்தள்ளப்பட்டுள்ளனர்"

(கிளிநொச்சி)

தமிழினம் இன்று அனேக துன்பங்களை அனுபவித்துக் கொண்டுள்ளது. தமிழ் மாணவர் கல்வியில் பின்தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில் மாணவ சமுதாயம் எதைச் செய்வது என்று தெரியாது தடுமாறிக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் மாணவர் கல்வி நிலையமொன்றினை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றுகையில் முன்னாள் யாழ் மாவட்ட சபை உறுப்பினர் திரு. இ. கிருஷ்ணராசா கூறினார்.

ஆசிரியர் த. மதிவாணன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. கிருஷ்ணராசா தொடர்ந்து பேசுகையில்:

"கிளிநொச்சிப் பகுதி கல்வியில் முன்னேற்றம் காணவேண்டும். இதுவே எமது அபிலாஷையாகும். இதற்காகவே எமது தொகுதி எம். பி. யாகப் பணிபுரிந்த திரு. ஆனந்தசங்கரி பெருந்தொகைப்பணத்தை செலவு செய்தார்" என்று கூறினார்.

கொத்தனி அதிபர் திரு. இரா. சின்னத்தம்பி, அதிபர் என். சோதிநாதன், திரு. சலேஷியஸ், ஆகியோரும் உரையாற்றினார்கள். (வெ)

# "கூட்டுறவுச்சங்கங்கள் சிறப்பாக இயங்க மக்கள் ஒத்துழைப்பு அவசியம்"

(புலோலி)

"கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக இயங்கும்போது மக்கள் சிறந்த நன்மைகளைப்பெற முடியும். கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக இயங்குவதற்குப் பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பு முக்கியமாகும்"

இவ்வாறு பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கெருடாவில் கிளைக்கு 30,000 ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத் தலைவர் திரு. கே. துரைராசா கூறினார்.

திரு. துரைராசா தொடர்ந்து உரையாற்றுகையில்;

"மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே கூட்டுறவு இயக்கம் செயற்பட்டு வருகின்றது. பொதுமக்கள் ஊழியர்கள் இயக்குநர்களின் ஒருங்கிணைந்த சேவைகளின் மூலமே கூட்டுறவு இலட்சியம் வெற்றியடைந்து அதன் மூலம் மக்கள் நன்மைபெறமுடியும்" என்று கூறினார். (வெ)

## கிளிநொச்சி

# பொலிஸ் இன்ஸ்பெக்டரின் சேவைக்குப் பாராட்டு

(கிளிநொச்சி)

'கிளிநொச்கிப் பகுதிவாழ் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்று மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரணசிங்கவின் சேவை பாராட்டிற்குரியது. ஜூலை கலவரத்தின்போது இவராற்றிய பணியை நாம் என்றும் மறக்க முடியாது"

இவ்வாறு கிளிநொச்சிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்செல்லும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ். பி. ரணசிங்கவிற்கு கிளிநொச்சிப் பொதுமக்கள் சார்பில் அளிக்கப்பட்ட பாராட்டு வைபவத்தில் உரையாற்றுகையில் கிளிநொச்சிப் பங்குத் தந்தை வணபிதா பயஸ் அடிகளார் கூறினார்.

கிளிநொச்சியிலுள்ள ஹோட்டலொன்றில் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு திரு. ரி. எஸ். தர்மலிங்கம் தலைமைதாங்கினார். பொன்னகர் கிராம முன்னேற்றச்சங்கத் தலைவர் ப. கணேசபிள்ளை, கிளிநொச்சி கிராமசேவையாளர் தனபாலசிங்கம் வட பிரதேச சித்த ஆயுர்வேத வைத்திய சங்கத் தலைவர் டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி ஆகியோர் பொதுமக்கள் சார்பில் பாராட்டுவைபவத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

இவ் வைபவத்தில் உதவி அரசாங்கஅதிபர்திரு க. சுப்பிரமணியம், முன்னாள் மாவட்ட சபைஉறுப்பினர் திரு. கிருஷ்ணராசா, பொறியியலாளர். திரு க. குமாரசாமி மாவட்ட வைத்திய அதிகாரி பி. நவரத்தினராசா, கொத்தணி அதிபர் திரு இரா. சின்னத்தம்பி, லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் க. தணிகாசலம், ரோட்டறிக்கழகச் செயலாளர் ப. வை. ஜெயபாலன் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரணசிங்க தமக்களிக்கப்பட்ட பாராட்டு வைபவத்திற்கு நன்றிதெரிவித்து உரையாற்றுகையில்;

"இங்கு உரையாற்றிய சகலரும் எனது சேவையை அளவிற்கதிகமாகப் புகழ்ந்தார்கள், நான் எனது கடமையைத்தான் செய்தேன். உண்மைக்கும் நேர்மைக்கும் எங்கும் இடம் உண்டு. பொலிஸ் சேவையில் இன, மதம் என்று பார்க்கக்கூடாது. சகலரையும் ஒரே கண்ணோட்டத்துடனே நோக்கவேண்டும் என்று கூறினார்.

## சேதமடைந்த ஆலயங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

ஜூலை கலவரத்தின்போது சேதமடைந்த தெஹிவளை விஷ்ணு கோவில் திருத்த வேலைகளுக்கு 'றெப்பியா' 60,000 ரூபாவை ஒதுக்கியுள்ளதாக உலக இந்துமகாசபைத் தலைவர் திரு. யோகேந்திரா துரைச்சுவாமி தெரிவித்தார்.

முகத்துவாரம் காளிகோவில் திருத்தவேலை பூர்த்தியாகிவிட்டதாகவும் மற்றும் சேதமடைந்த 30 கோவில்களை திருத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (க)

**மணிவாக்கு**

காலந்தவறாது நீராடுவதும், காய்கறி வகைகளை உண்பதுமே முத்தியளிக்கும் என்று நினைத்தால் மீன்களுக்கும் குரங்குகளுக்கும் முத்தி கிடைக்கும்.

—சுவாமி விவேகானந்தர்

## நமதுநோக்கு

# வெற்றிக்கு அவசியமான வேண்டுகோள்

சர்வகட்சி மாநாட்டைப் பாதிக்கக்கூடிய எந்த விஷயத்தையும் பிரசுரிக்க வேண்டாமென்று ராஜாங்க அமைச்சின் செயலாளர் பத்திரிகைகளுக்கு விடுத்த வேண்டுகோள் வீண்போகக் கூடாதென்பதே எமது விருப்பம்.

இந்தவேண்டுகோள் இக்கால எல்லையில் அவசியமானதென்பதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார். பொறுப்புடைய பத்திரிகைகள் எவையும் சர்வகட்சி மாநாட்டை ஒரு சாதாரண சம்பவம் என்று கருதுமென அஞ்சவேண்டியதில்லை.

இத்தகைய மாநாடு கைகூடுவதற்கு எத்தனை தியாகங்கள், திட்டங்கள், தில்லுமுல்லுகள் நடந்தேறிவிட்டன! இவற்றை எண்ணிப் பார்த்தால் பகுத்தறிவுடைய மனிதன் எவனும் இதற்கு ஒரு சிறு கல்லாவது எறிய ஒருப்படமாட்டான் என்பது நிச்சயம்.

சமுதாய மனிதன் ஒவ்வொருவனும் தனக்கென ஒரு அபிப்பிராயம் உடையவன் என்பதே ஜனநாயக சித்தாந்தத்தின் மூலக் கோட்பாடு. "எத்தனை மனிதர் அத்தனை கருத்துக்கள்" என்பதொரு பழையலத்தீன் மணிவாக்கு.

அந்த உரிமை இந்த முக்கிய கட்டத்திலும் மறுக்கப்படுவதை நாம் விரும்பவில்லை; ஆனால் செயற்பாட்டு முறையில் ஒவ்வொரு பிரஜையும் தன்னுடைய சொந்த உள்ளக்கிடக்கை வெளிப்படுத்தும் உரிமையை வற்புறுத்தமுயன்றால் சமுதாயத்துக்குச்சார்பான முடிவு எதுவென்பது கருத்து வேற்றுமையென்னும் கடலில் கருத்துமாறுபாடாய்க் கரைந்துவிடும்.

இந்தஅடிப்படையிலேயே பாராளுமன்ற பிரதிநிதித்துவமும் அமைந்திருக்கிறது. அதுதான் சிறந்த முறையென்று கொள்வதற்கில்லை. எங்கள் நாடே இதற்குநல்ல உதாரணமாக இன்று விளங்குகிறது.

எனவே அசாதாரண சிக்கல்களுக்கு அசாதாரண நடைமுறைகளைக் கையள்ளுவது தவிர்க்கமுடியாததாகும்.

இதுகாறும் இவ்வித மாநாட்டைக் கூட்டமுடியாததற்கு எவரையும்குறை சொல்லிப்பயனில்லை.

பல எதிர்ப்புகள், சுமுக மற்ற சூழ்நிலைகள் எதிர்பாராத இடர்கள் ஒருங்கு சேர்ந்து விட்டால் இத்தகைய மாநாடு இலகுவில் ஒப்பேறாது. எனவே சர்வகட்சி மாநாடு சரிவரும் சூழ்நிலைக்கும் ஒருகாலநியதி உண்டுபோல் தெரிகிறது. அதற்கு முன்னர் அது "வருந்திய ழைத்தாலும் வாராது" போலும்.

இன்று உதயமாகும் நல்ல வேளையில் இதற்கு முட்டுக்கட்டையாக விருக்க எந்த முட்டாளும் உடன்படமாட்டான்; இந்த நாட்டிலோ, இதன் பல்வேறு சமூகங்களிலோ என்ன பற்றுக்குறையிருந்தாலும் 'முட்டாள்கள் தட்டுப்பாடு என்றுமே இருக்காது.

அக்காரணம்பற்றியே பத்திரிகைகளுக்கு திரு. டக்ளஸ் லியனகே விடுத்த வேண்டுகோள் இன்றியமையாத காரியமாகின்றது.

மகான்களும், சான்றோரும் அறிஞரும் அரிய சாதனைகளை இயற்ற உதவுவது மௌனம் 'மௌனம் கலக நாஸ்தி' என்பதும் வேண்டிய நேரத்தில் மௌனமாயிருத்தலைக் குறிக்கின்றது.

அந்த அருமந்த நேரத்தில் தான் எங்களிற் பலர் இவ்வித மாநாட்டுக்கு வழிகாட்ட கட்டுரை தீட்டுவது, கடிதம் மகஜர் போன்ற ஆவணங்கள் தயாரிப்பது இயற்கை; இது ஒரு மனநோய் என்று கொள்வதற்கில்லை.

பொதுநல உணர்வு ஆண்டவன் பிரதிநிதிகளுக்கே சட்டென்று பெருகிவிடுவது சாதாரணம். தெய்வம் தானும், இந்த இக் கட்டில் பத்திரிகையிலோ வானொலியிலோ தனது சிந்தனைத் திறனையும், தேசிய உணர்வையும் வெளிப்படுத்தாது கட்டுப்பாட்டுடன் அடங்கி இருக்க வேண்டுமென்பதை உணர வேண்டும்.

இந்தக் கருத்தே அந்த வேண்டுகோளில் அடங்கியிருக்கிறது. பத்திரிகாசிரியர்களுக்குத் தெரியாத புதுக் கருத்தல்ல இது. ஆனால் விழிப்பில்லாதிருந்தால் இப்பெரும் முயற்சிக்கு தடை ஏற்படுமென்பது தெளிவு.

தமிழர் பிரச்னை தீர பல இடர்கள் பறையவேண்டும்; அது தீர்ந்துவிட்டால் நாட்டின் குறைகள் எல்லாம் நீங்கி விடுமென்பதல்ல.

சுதந்திர வாழ்வில் ஒவ்வொரு பிரஜைக்கும் வேண்டிய மூன்று பொருள்கள்: இரண்டு நேரமாவது உண்ண உணவு; உடுக்க சுத்தமான ஆடை; உறங்க வீடு. இன்று நாட்டில் ஒரு பகுதியினர், மிகச்சிலர் இந்திர வாழ்வு வாழ பெரும் பகுதியினருக்கு இவை கனவாகவே இருக்கின்றன.

இந்த பெரும்பொறுப்பை நிறைவேற்ற நாட்டின் பொருளாதாரம் இன்னும் சீரமைக்கப்பட்டதாயில்லை.

இதன் முக்கிய காரணமே நெடுங்காலமாகத் தொடரும் தமிழர்பிரச்னை. இதனை இன்று பொறுப்புடைய மக்கள் எல்லோரும் உணர்ந்திருக்கின்றனர். இந்த உணர்வு நிரந்தரமாவதற்கு கடந்த சம்பவங்கள் காரணமாகின்றன

எனவே இன்று எடுக்கப்படும் நடவடிக்கைகளில் மக்கள் நம்பிக்கை கொள்ள நியாயமுண்டு.

தேசப்பற்றின் பேரில் நாமனைவரும் அவற்றின் வெற்றிக்கு உழைப்பதே தலையாய கடன்.

### இன்று 57 வயது

# சைவத்தில் மூழ்கிவிட்ட அமெரிக்க சுவாமிகள்

இன்று 57வது ஜயந்தியைக் கொண்டாடும் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் 1927ம் ஆண்டு கலிபோர்னியாவில் பிறந்தார். இளம்பிராயத்திலே யோகம், தியானம், சமாதிநிலை ஆகியவற்றில் ஈடுபட்டு பயிற்சிபெறலானார். சற்குருவைக் காண விரும்பி இருபதாவது வயதில் இலங்கை வந்தார். யாழ்ப்பாணம் வந்து 1949ம் ஆண்டு மே மாதம் பௌர்ணமி நன்னாளில் கொழும்புத்துறை ஆச்சிரமத்தில்சிவயோகசுவாமிகளைக் கண்டு தத்துவஞான விளக்கத்தில் தேறி சுப்பிரமுனிவர் எனும் தீட்சா நாமத்தைப் பெற்றுக்கொண்டார். அப்பொழுது இந்த இளந்துறவியின் வயது இருபத்திரண்டே.

அமெரிக்காவுக்குத் திரும்பி ஏழாண்டுகள் தவமியற்றினர். இதேகாலத்தில் அளவெட்டியில் ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தைஸ்தாபித்தார். இதுவே சுவாமிகளின் முதலாவது பொதுப்பணி. 1957ல் தனது முப்பதாவது வயதில் சைவ சித்தாந்த திருச்சபையை நிறுவி தீவிர சைவ போதனைகளைத் தொடங்கினர். கலிபோர்னியாவில் ஹிமாலயன் அக்கடமி என்னும் போதனா நிலையத்தையும் ஹாவாய் தீவில் குவாய் ஆதீனம், கடவுள் சிவாலயம், மடம், அச்சகம் ஆகியவற்றையும் நிறுவினார். நெவாடாவில் ஸ்கந்த மலை எனும் மடாலயம் நிறுவப்பட்டது.

உலகெங்கும் சைவ தர்மத்தை வளர்த்துப் பாதுகாப்பதில் பெரும்பணி புரிந்து வருகிறார்.

சமயத்தில் மனிதனின் பங்கு, ஆன்ம விடுதலை, வாழ்க்கைத் தத்துவம் சம்பந்தமான சிறந்த பிரசுரங்களை வெளியிட்டுள்ளார். சன்மார்க்க வீட்டுப் படிப்புத்திட்டம் ஒன்றை ஹிமாலயன் அக்கடமி மூலம் செயல்படுத்தி வருகிறார். திருக்குறளை கவிதை



நடையில் ஆங்கிலத்தில் பிரசுரித்துள்ளார். இதுபோல திருமந்திரமும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் மாத்திரமல்லாது தென்னபிரிக்கா, மொறிஷியஸ், இன்னும் பல நாடுகளில் சுவாமிகளும் அவர் மடத்திலுள்ள மற்றத்துறவிகளும் சைவ தர்மப் பிரசாரம் செய்து சைவத்தை வளர்க்கின்றனர் "நியு சைவைட் வோல்ட்" எனும் ஆங்கில சமய சஞ்சிகையையும வெளியிடுகிறார்கள்.

வருடாவருடம் அமெரிக்க யாத்ரீகர்களை இலங்கைக்கும் மலேஷியாவுக்கும் இந்தியாவுக்கும் அழைத்துவந்து புகழ்பெற்ற புராதன க்ஷேத்திரங்களைக் காட்டி சைவத்தின் மேன்மையை பரவச்செய்கிறார் குருதேவர். மேல்நாட்டில் பல சைவக் கோயில்களை கட்டியும் கட்டட உதவியும் வருகிறார்.

அளவெட்டியிலுள்ள ஆச்சிரமத்தின் நிர்வாகத்திலுள்ள ஸ்ரீ பசுபதீஸ்வரர் கோயிலை பெரிதாகப் புனருத்தாரணம் செய்யும் பணி ஆரம்பமாகியுள்ளது.

அளவெட்டிஸ்ரீசுப்பிரமுனிய ஆச்சிரமத்தில் ஏறக்குறைய 200 மாணவ மாணவியர்வரை சைவதர்மம், ஆங்கிலம், சங்கீதம், பண்ணிசை, வீணை, மிருதங்கம், நடனம் முதலிய பாடங்கள் கற்கிறார்கள். கற்று விசேட சித்திபெற்றவர்கள் வருடாவருடம் சுவாமிகளின் ஜெயந்தியின்போது பல பரிசில்களைப் பெறுகிறார்கள். பிள்ளைகளின் கலைநிகழ்ச்சிகளுக்காக "பிள்ளையார் அரங்கு" எனும் திறந்தவெளி அரங்கையும் அமைத்துள்ளார்கள்.

ஆடி அமளியால் அகதிகளாக்கப்பட்டோருக்கு சுவாமிகள் தீவிர முயற்சி எடுத்து மேல்நாட்டில் பணம் சேர்த்து அனுப்பி இங்கே முகாம்களில் நிவாரணம் வழங்கிய நற்பணி யாவரும் அறிந்ததே.

சைவசித்தாந்தம் தழைத்தோங்க அல்லும்பகலும் அரும்பாடுபடும் சிவாயசுப்பிரமுனிய சுவாமிகளைப் பல்லாண்டு வாழ்கவெனப் பிரார்த்திப்போம்.

- எஸ். சிவபாலசிங்கம்

# நல்லையில் தமிழ்ப்பணி

யாழ்ப்பாணம் ஆரிய திராவிடபாஷாபிவிருத்திச் சங்கச் சார்பில் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்திலும், நல்லூர் மங்கையர்க்கரசி மகளிர் கல்லூரியிலும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாட்களிலும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை பால பண்டித, பண்டித வகுப்புகள் இலவசமாக நடைபெறுகின்றன.

### சங்கத்தின் தோற்றம்

செந்தமிழ், ஆரியம் ஆகிய இருமொழிகளையும் மரபுவழி நின்று மாணவர் நன்கு கற்கத் துணை செய்யும் நோக்குடனும் ஆரிய திராவிட புராதன வரலாற்று ஆராய்ச்சியை வளர்க்கும் நோக்குடனும் இச்சங்கம் ஆரம்பிக்கப் பெற்றது. ஏறக்குறைய அறுபது ஆண்டுகளின்முன் ஆரம்பிக்கப்பெற்ற இச்சங்கம் பண்டிதர் பலரையும், பாலபண்டிதர் பலரையும் உருவாக்கி நாட்டில் நற்றமிழையும், ஆரியத்தையும் வளர்ப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது என லாம். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளார், வித்தியாதரிசி சதாசிவ ஐயர் முதலான பேரறிஞர் பலர், இலங்கைக் கல்வி மா அதிபரின் தலைமையில் 1921 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் பதினேழாம நாள் வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் கூடி இச்சங்கத்தினை ஆரம்பித்தனர். 1922 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இச்சங்கம் பணிபுரிய ஆரம்பித்தது ஈழத்தின் பல பாகங்களிலும் காவிய வகுப்புகள் தொடங்கப் பெற்றன. ஆண்டுதோறும் பிரவேச பால பண்டித பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. பண்டிதர்களின் பால பண்டிதர்களும் தமிழ் வளர்ச்சிக்குத் துணை புரியலாயினர்.

### சங்கத்தின் பரந்த நோக்கம்

வகுப்புகள் நடத்துவதும், பரீட்சை நடத்துவதும் மட்டும் சங்கத்தின் நோக்கம் அன்று. நூல்களை வெளியிடுவதும் ஆண்டுதோறும் தமிழ்விழா எடுப்பதும், பேரறிஞர்களைப் பாராட்டுவதும், பட்டம் அளிப்பதும், ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடுவதும் முக்கிய நோக்கமாக உள்ளன. பண்டைத் தமிழ்ச் சங்க நூல்களின் ஒன்றாகிய ஐங்குறுநூறு அழகுறப் பதிப்பிக்கப் பெற்றுச் சங்கச் சார்பில் வெளிவந்தது. கரவை வேலன் கோவை தண்டிகைக் கனகராயன் பள்ளு என்னும் பிரபந்த நூல்களும் சங்கச் சார்பில் வெளிவந்தன. 'கலாநிதி' என்ற மாத இதழும் வெளிவந்தது. நிதி நெருக்கடி காரணமாக அது நின்றுவிட்டது ஆராய்ச்சிக் கழக சார்பில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அன்டைக்காலம் வரை எழுதி வாசித்து ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளன. இந்தியப் பேரறிஞர்களும், ஈழத்துப் பேரறிஞர்களும் ஒன்றுகூடி தமிழ் மாநாடுகள் நடத்தும் வாய்ப்பினையும் சங்கம் இடைக்கிடை புரிந்தது.

### சங்க வெள்ளி விழா

மரபுவழி நின்று மொழி வளர்க்கும் நோக்குடன் வளர்ந்துவந்த யாழ். ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் 1950ஆம் ஆண்டில் வெள்ளி விழாவும் கொண்டாடி 'மலர்' ஒன்றும் வெளியிட்டது. அப்பொழுது துணைச்செயலாளராகக் கடமையாற்றியவர் மறைந்த வித்துவான் துன்னாலையூர் சி. இ. கந்தசாமி அவர்கள் அவருடைய பணி மகத்தானது:-

### காவிய வகுப்பும் காவியபாடசாலையும்

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் காவியவகுப்புகளை நடத்திப் புகழ்பெற்றவர் என்பதனை வரலாறு நன்கு அறியும் அவருக்குப்பின்இன்று நம்மிடையே வாழும் செந்தமிழ் முனிவர் பண்டிதமணி உயர்திரு சி. கணபதிப்பிள்ளை அவர்கள் திருநெல்வேலியில் காவியபாடசாலை அமைத்துப் பெரும்பணி புரிந்துவந்தார் நாவலர் பரம்பரை மாணவர் நாட்டில் பெருகவேண்டும் என்ற நோக்குடன் பண்டிதமணி அவர்கள் ஆக்கிய காவிய பாடசாலை ஒரு கலைச்சோலையாக விளங்குகிறது. இன்று அப்பாடசாலை நடக்கு இயங்காவிடினும் அதன் கிளைகள்போல் பண்டிதமணியவர்களின் மாணவர்களும் மாணவர்களின் மாணவர்களும் வகுப்புகளை நடத்திவருகின்றனர் அண்மையில் அமரரான பண்டிதர் செ.

(5ம் பக்கம் பார்க்க)

**வித்துவான் சி. ஆறுமுகம்**

## இந்திய மீனவர் மீதான வழக்கு:

# அமைச்சு செயலாளர் கோரிக்கை யாழ். மேல் நீதிமன்றம் நிராகரிப்பு!

(நல்லூர்)

மீன்பிடித்துறை அமைச்சின் செயலாளர் வழக்கொன்றை வாபஸ்பெறுமாறு விடுத்த வேண்டுகோளை யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி ஜி.ஜே. ஆசீர்வாதம் நிராகரித்தார்.

அரசாங்கத்தால் வழக்குத் தொடரப்பட்டுநீதிமன்றத்தில் விசாரணை ஆரம்பமாகி விட்டால் அவ்வழக்கை வாபஸ் பெறும் அதிகாரம் எந்தவொரு அமைச்சுக்கோ, அமைச்சின் செயலாளர்களுக்கோ கிடையாது சட்டமா அதிபருக்கே அவ்வதிகாரம் உண்டு. 'நொலே பிரஸ்குயு' என்னும் மனுவொன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து அவ்வாறு வாபஸ் பெறலாம். என்று நீதிமன்ற வழக்கு விசாரணையின்போது நீதிபதி ஐ. ஜே. ஆசீர்வாதம் வலியுறுத்தினார்.

இலங்கையின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட கடல்பிராந்தியத்தில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்தது தொடர்பாக இரண்டுபிடி இயந்திர வள்ளங்களின் உரிமையாளர்களுக்கு எதிரான வழக்கு விசாரணையின்போது இவ்வாறு கூறப்பட்டது.

கடந்தமாதம் 24-ம் தேதி இருமீன்பிடி வள்ளங்களில் பத்து இந்திய மீனவர்கள் இலங்கையின் எல்லைக்குட்பட்ட கடற்பிராந்தியத்தில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது காரைநகரில் உள்ள கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ். மேல் நீதிமன்றத்தில் மீன்பிடித் திணைக்களத்தினரால் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டபொழுது, இருவள்ளங்களின் இயக்குனர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். ஏனையோர் நாடுகடத்தும் நோக்குடன் தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டனர்.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது யாழ்ப்பாண மீன்பிடி விரிவாக்கல் உத்தியோகத்தர் கே. டி. சிவஞானம் இவ்வழக்கினை வாபஸ் பெறும்படி மீன்பிடி அமைச்சின் செயலாளர் தனக்குத் தொலைபேசி மூலம் அறிவித்துள்ளதாகக் கூறினார் அப்போது மேல்நீதிமன்ற அத்தகைய அதிகாரம்சட்டமா அதிபருக்கு மட்டுமே உண்டு என்று விளக்கினார்.

இது சம்பந்தமாகச் சட்டமா அதிபரிடம் இருந்துபணிப்புரை எதுவும் தனக்குக் கிட்டவில்லை என்று முடிக்குரிய சட்டத்தரணி ஐ. ஞானதாசன் கூறினார். (க)

---

யாழ். மாவட்டத்திலுள்ள மலையக அகதிகளை

## பழைய இடங்களுக்கு அழைக்க முயற்சி

[சாவகச்சேரி]

மலையகப் பகுதிகளில் இருந்து கலவரத்தால் பாதிக்கப்பட்டு, யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வருகை தந்துள்ள அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் மலையக மக்களை திருப்பவும் பழைய இடங்களுக்கோ அல்லது அவர்கள் விரும்புகின்ற வேறு மலையக மாவட்டங்களுக்கோ அழைப்பதற்கான முயற்சிகளை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பான சுற்றறிக்கைகள் வடபகுதி அகதிகள் முகாம் பொறுப்பதிகாரிகளுக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதுவிடயம் தொடர்பான நிலைமைகளை நேரில் ஆராயும் பொருட்டு அத்தியாவசியசேவைகள் உதவி ஆணையாளர் திரு ராஜா விக்கிரமசிங்கா வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார் எனவும் தெரிய வருகிறது. [வெ]

---

## மன்னாரில் 36 அகதிகள் குடும்பம் பழைய இடங்களுக்கு சென்றன

(மன்னார்)

ஜூலையில் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு வவனியா - பெரியகட்டு அகதி முகாமில் தங்கியிருந்த 94 குடும்பங்களைச்சேர்ந்த 437 பேரில் 36 குடும்பங்களைச் சேர்ந்த 111 பேர் மீண்டும் பழைய இடங்களுக்குச்சென்றனர்.

இவர்களில் 16 குடும்பங்களைச்சேர்ந்த 48 பேர், 20 குடும்பங்களைச்சேர்ந்த 63 பேர் பழைய இடங்களுக்குத் திரும்பிச்சென்றனர்.

பெரியகட்டு அகதி முகாமிலிருந்து மீண்டும் பழைய இடங்களுக்கு திரும்பிச்சென்ற ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 1500 ரூபா பணமும் 500 ரூபா பெறுமதியான துணிவகைகளும் சமையல் உபகரணங்களும், ஒரு மாதத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டது.

பெரியமடு அகதி முகாமில் தற்போது தங்கியிருக்கும் 58 குடும்பங்களைச் சேர்ந்த 326 பேரும் மீண்டும் பழையஇடங்களுக்குச் செல்ல மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இதனால் இவர்களை மன்னார் மாவட்டத்தில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது இந்நடவடிக்கைகளைசெடெக் ஸ்தாபனம் மேற்கொண்டு வருகிறது.

---

## நல்லையில் தமிழ்ப் பணி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

துரைசிங்கம், இச்சங்கத்தின் துணைச்செயலாளராக விளங்கி வகுப்புகளும் நடத்திப்பணி புரிந்தவர். அவர் ஆன்மா சாந்தியடைய வேண்டுமாயின் காவிய வகுப்புகள் பல, நாட்டின் பல பாகங்களில் நடைபெறவேண்டும். என் அருமை நண்பர் அறிஞர் பண்டிதர் க. வீரகத்தி அவர்கள் வாணி கலைக்கழகம் அமைத்து வகுப்பு நடத்திவருகின்றமையை யாவரும் அறிவர் கரவெட்டியில் வித்துவான் த. கிருஷ்ண பிள்ளை அவர்களும், பண்ணாகத்தில் பண்டிதர் அ. ஆறுமுகம் அவர்களும், மல்லாகத்தில் பண்டிதர் க. பொன்னுத்துரை, பண்டிதர் க. நாகலிங்கம் முதலானோரும் வகுப்புகள் நடத்தியமையையும் நாம் அறிவோம். அவர்கள் மீண்டும் இப்பணியில் முன்னிற்கவேண்டும் என்பதே சங்கத்தின் பேரவா.

### மகாவித்துவான் சுப்பையாபிள்ளையும் காவிய வகுப்பும்

பேரறிஞர் மகாவித்துவான் சுப்பையாபிள்ளை குறிப்பிடத்தக்க ஒரு பெருந்தமிழ்த் தொண்டர். நாவலர் பாடசாலையில் அதிபராகக் கடமை ஆற்றியதுடன் நாவலர் சபையின் கட்டளைப்படி, தமிழ்அறிஞர் பலரை உருவாக்கியவர் அவர். அவர் நடத்திய காவிய வகுப்பிகளில், கற்றவர் பலர் இச்சங்கத்துப் பரீட்சைகளில் தேறிப் பண்டிதர்களாகப் பணிபுரிகின்றனர். அப்பணி அவருக்குப் பின்னரும் பண்டித வித்துவான் இ. அருநாவுக்கரசு போன்றவர்களால் தொடர்ந்தும் புரியப்பெற்றது. இன்று தளர்ந்துவிட்டது மீண்டும் அப்பணி தலைதூக்கவேண்டும்!

### புதிய விழிப்புணர்ச்சி

இச்சந்தர்ப்பத்தில் கல்லூரிகளில் தமிழ்மொழி கற்பிக்கத்தக்க ஆசிரிர் பலரை உருவாக்க வேண்டியது எம் சங்கத்தின் முதற்கடமையாகின்றது. இன்று தமிழ்மொழியுணர்வு தலைதூக்கி நிற்பதுகண்டு மகிழ்ச்சியடைகின்றோம். அதே வேளையில் தமிழ்மொழி அறிவும் இணைந்து எழுந்து வளர்ந்து ஓங்கவேண்டும்!

நல்லூரில் அமைந்திருக்கும் செந்தமிழ் கலை வகுப்புக்கு 'காவிய வகுப்பு' என்ற அருமையான பெயரைச்சூட்டியவர் பண்டிதமணி உயர்திரு சி. கணபதிப்பிள்ளை அவர்கள். பெயருஞ்சூட்டி வாழ்த்துங்கூறி மகிழ்வித்த பண்டிதமணிஅவர்களை அடிக்கடி கண்டு வணங்கி வார்த்தையாடித் திரும்புவதில் சுவர்க்கங்காண்பவர்களில் நானும் ஒருவன். அவர் மவுனியாக அமர்ந்து தமிழ்ப்பணி புரிகின்றார்! அவர் எம் வழிகாட்டி என் குருவுக்கும் அவர் குரு நாவலர் மாணவன் பரம்பரையில் ஒரு வைரமணி பண்டிதமணி. அவருடைய வாழ்த்துரை பின் வருமாறு:-

''யாதும் ஊரே
யாவரும் கேளிர்
தீதும் நன்றும்
பிறர் தர வாரா''
-கணியன் பூங்குன்றனார்
[புறநானூறு]

### வகுப்பு ஒழுங்கு

1984 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் முதல் ஆறு மாதங்களிலும் பன்னிரண்டு விரிவுரையாளர் கலந்து பாடம்போதிப்பர். பின்னர் ஏழாம் மாதம் முதல் பத்தாம் மாதம்வரை பத்து விரிவுரையாளர் போதிப்பர். பத்து மாதங்களின் பாடபோதனை நிறைவுறும். பூரணை நாட்களில் எல்லா வகுப்புகளுக்கும் இலக்கியத்திறனாய்வு போதிக்கப்படும்; இலக்கண ஆராய்ச்சி விரிவுரைகளும் இடைக்கிடை நிகழும்

காவிய வகுப்பு நன்கு வளரின் சில ஆண்டுகளில் ஆதீனத்தின் சார்பில் ஒரு செந்தமிழ் கல்லூரியையே நிறுவிவிடலாம் எதிர்காலம் தமிழ் அறிஞர் இதனை நிறைவேற்றுவாராக. தமிழகத்திலுள்ள ஆதீனங்கள் செந்தமிழ்க் கல்லூரிகளை நடத்தல் கண்கூடு. நாமும் நமது மொழியும் வளர செந்தமிழர் குலதெய்வம நல்லூர் முருகன் அருள் புரிவாராக.

---

## தற்கொலை

[திருகோணமலை]

பொறுமையைக் கடைப்பிடிக்கும்படி அண்ணன் தம்பிக்குப் புத்திமதி கூறினார் தம்பியோ புத்திமதியைக் கேட்டுப் பொறுமையிழந்து நஞ்சருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

பன்குளம் வாசியான பொன்னையா நாகராசா என்பவரின் மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் வெளியானது

கோமரங்கடவல திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. யு. பி. குணசேகரா மரண விசாரணை நடத்தினார் இறந்தவரின் சகோதரர் பொன்னையா அருணாசலம் சாட்சியளித்ததை தொடர்ந்து தற்கொலை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. உப்புவெளிப் பொலிசார் சாட்சிகளை ஆஜர்செய்தனர்.

---

## பொங்கல் விழா

(புலோலி)

இந்துக்களின் கலை கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கும் முகமாக பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கத்தால் ஆண்டுதோறும் நடாத்தப்பட்டுவரும் பொங்கல் விழாவும் பட்டமேற்றும் போட்டியும் இம்மாதம் 15-ம் திகதி பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெறவுள்ளது (வெ)

---

## தொலைபேசி தொடர்பின்றி மக்கள் கஷ்டம்

(புலோலி)

வடமராட்சிப் பகுதியில் தொலைபேசிப் பாவனையாளர் தொலைபேசித் தொடர்பைப் பெற்றுக்கொள்ளமுடியாமல் பெரும் கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர்.

அண்மையில் பெய்த மழையையும் வீசிய கடுங்காற்றையும் தொடர்ந்தே தொலைபேசிப் பாவனையாளர்கள் தொலைபேசித் தொடர்பைப் பெற்றுக்கொள்வதற்குப் பெரும் கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர் (வெ)

---

## கூட்டம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 22ம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (வெ)

---

## ஆங்கில அறிவுக்கு வித்திட்டவர்

மீட்ட முன் இசை பிறக்கும் யாழின் இன்னிசையுடன் செந்தமிழும் கொஞ்சிக் குலவும் யாழ்ப்பாணத்தில், கல்வித் திணைக்களத்தின் ஆங்கிலத் துறையின் திறமைமிக்க வலதுகரமாக விளங்கிய திரு பிரான்சிஸ் மாசிலாமணி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் பணியாற்றினார். நேற்று அன்னாரது ஓராண்டு நினைவு தினமாகும்.

வற்றாத புன்சிரிப்பு அமைதியான அடக்கமான சுபாவம், கடலளவு தெரிந்தும் கையளவு தான் தெரியும் என்று சொல்கின்ற பெருமையே அறியாத பண்பு, பொறுமையுடன் சிரமமின்றி அளவளாவும் பக்குவம் - என்னதான் நோய்வாய்ப்படினும் கடமையே கண்ணாக மதித்த கண்ணியவாளன இத்தனைக்கும் இலக்கணமாய் மிளிர்ந்தவர்தான் மாசிலாமணி மாஸ்டர்.

மாணவர் எல்லோரையும் தன்பால் ஈர்த்து பசுமரத்தாணி போல் அந்நிய மொழியை அதற்கியைந்த ஓசைநயத்துடன் புகட்டியர். பள்ளியில் படிக்கும் மாணவர் குழாத்திற்கு மட்டுமல்ல அக்குழாத்திற்கு அறிவூட்டும் ஆசான்களுக்கேஆலோசகராக இருந்து அன்புடனும் எளிமையுடனும் ஆங்கில அறிவு புகட்டியவர்

மாதகலில் உதித்து, யாழ்ப்பாணத்தில் தனது இளம் பிராயத்தைக் கழித்தாலும் இறுதி எட்டு வருடங்களில் சாவகச்சேரியில் வாழ்ந்து எண்ணிலடங்காத சேவைகள் இயற்றித் தனக்கென ஓர் இடத்தை எடுத்துக்கொண்ட உத்தமன் இத்தொகுதியிலிருந்து இக்கால இடைவெளியில் பல்கலைக்கழகம் புகுந்த பெரும்பான்மை மாணவர்களின் ஆங்கில அறிவுக்கு வித்திட்டவர்.

அவரின் பூதவுடல் மண்ணோடு மண்ணாகலாம், ஆவி காற்றோடு காற்றாகலாம். ஆனால் அவர் செய்த சேவை, மாஸ்டரின் புகழுடம்பு என்றுமே மறையாது. அவருடைய ஒவ்வொரு மாணவனின் நாவிலும் ஆங்கிலம் நடமிடும் போதும் மாசிலாமணி என்ற நாமமும் ஒருங்கே இசை பாடும் என்றால் மிகையாகாது.

-கல்யாணி குமாரசாமி

---

## கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தவர்கள் காத்து நிற்கின்றார்கள்!

(மானிப்பாய்)

யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்றுக்கொள்ளப்படும கடவுச்சீட்டுக்களுக்குக்கான விண்ணப்பப்பத்திரங்கள் கொழும்புக்குக்கட்டி அனுப்பப்பட்டு அங்கு கட்டெதுவும் அவிழ்க்கப்படாதநிலையில் அப்படியே இருக்கின்றதா என்ற சந்தேகம் இப்போது இங்கு பொதுவாக எழுந்துள்ளது.

சிலவிண்ணப்பதாரர்களுக்கு மாதங்களாகியும் இன்னமும் உரியபாஸ்போர்ட் கிடைக்கவில்லையாம்.

விண்ணப்பித்தவர்கள் காத்துநிற்கின்றார்கள்.

---

## கைதடி அகதிகள் முகாமில் இப்படி ஒரு தொல்லை!

[சாவகச்சேரி]

கைதடி அகதிகள் முகாமில் இருந்து பிள்ளைகளைத் தத்து எடுத்து வளர்ப்பதற்கும். வீட்டு வேலைகள் செய்விப்பதற்கும் என தினமும் பலர் வந்து விசாரித்துச் செல்கின்றனர்

ஆனால் முகாம் ஆரம்பிக்கப்பட்டு இற்றைவரை இப்படியான செப்பல்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிர்காலத்திலும் இவ்வாறான செயல்களை அனுமதிப்பதில்லை எனவும், இம்முகாமின் நிர்வாகிகள் தெரிவித்ததுடன் இப்படியான எண்ணத்துடன் யாரும் முகாமிற்கு வருகை தந்து தொல்லை தர வேண்டாமெனவும் வேண்டியுள்ளனர்.

# பனையைப் பயன்படுத்தும் சங்கங்களுக்கு நிபுணர் யோசனை

(வண்ணார்பண்ணை)

வலி தென் மேற்கு தெங்கு பனம் பொருள் உற்பத்தியாளர் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தை விரைவில் கூட்டி புதிய நிர்வாகிகள் தெரிவை நடத்த வேண்டும் என்று அண்மையில்கூடிய இச்சங்கத்தின் மகாசபை முடிவு செய்தது.

இச்சங்கத்தின் தலைவர் யோ. செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த மகாசபைக் கூட்டத்தில் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ், வேலாயுத பிள்ளை, பொதுநல நாடுகளின் பனைவள ஆலோசகர் திரு. கே. சம்பந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சங்கத்தின்தேவையற்ற செலவீனங்கள் பற்றி பலஉறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்ததைத் தொடர்ந்து, வருடாந்தப் பொதுக் கூட்டத்தை விரைவில் கூட்டி புதிய நிர்வாகிகள் தெரிவை நடத்தவேண்டும் என்ற தீர்மானத்தை இந்த மகாசபை எடுத்தது. இக்கூட்டத்தில் நூற்றுக் கணக்கான உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பொதுநல நாடுகளின் பனைவள ஆலோசகர் திரு. கே. சம்பந்தம் பேசுகையில், பனையைப் பயன்படுத்தித் தொழில் செய்யும் இச்சங்கங்கள் சகல மக்களும் பயன் பெறத்தக்க வகையில் பதநீர் உற்பத்தியிலும், பதநீர் விற்பனையிலும் ஈடுபடவேண்டும், பனையின் பலதரப்பட்ட பயன்களையும் மக்கள் அனுபவிக்க இச்சங்கங்கள் முயல்வதுடன், இவற்றினால் நல்ல லாபத்தையும் பெற முயலவேண்டும், என்றார்.

## இன்றைய பலன்

மார்கழி மாதம் 21ம் திகதி
வியாழக்கிழமை
(5-1-84)

மேடம்: வாகன சுகத்துடன் வரவிலும் திருப்தியுண்டு தாய் வழிப் பெருமைக்கும் இடமுண்டு அறவழிகளில் மனம் நாடும்.

இடபம்; புதிய பாதை எதிர் நோக்கும் புத்திரவழியால் மனத்திருப்தி உருவாகும் நீண்டநாள் பிணி நிவர்த்தியடைய இடமுண்டு.

மிதுனம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும் தவறுகளும் இடம்பெறலாம் சிலருக்கு அன்னிய வாசமும் உண்டுநி தானம் நன்று.

கடகம்: பொன்னுனசந்தர்ப்பமொன்று உங்களை பூரிக்க வைக்கும் தேடிய உறவு நாடியே வரும் இனம் பருவத்தினருக்கு இனியதினம்.

சிங்கம்: தொல்லைகள் தலை தூக்கும் ஏமாற்றத்திற்கு இடமுண்டு அவசர முடிவைத் தவிர்த்துக் கொள்ளவும் அமைதி அடக்கம் நன்று.

கன்னி: பெரியோரைப் பேணுவதன் மூலம் பெரிய காரியங்களைச் சாதிப்பீர்கள் பொதுத்துறையில் அதிக புகழ் ஈட்டுவீர் மகிழ்ச்சியானதினம்.

துலாம்: தொழில் துறையில் வெற்றி வெளியிடப் பயணங்கள் பற்றிய செய்தி கிடைக்கலாம் சிலருக்கு பயணங்கள் இடம்பெறும் இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல் இனியதினம்,

விருச்சிகம்: இலட்சியப் பாதையை நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும் எதிர் பார்த்த பொருள் கிடைக்கலாம் பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரலாம் இலாபகரமான தினம்.

தனுசு: நடையில் தயக்கம் ஏற்படும் உங்கள் விடயத்தில் உண்மை இன்று ஊமையாகிவிடும் உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம்

மகரம்: கவலையின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள் அவசர போக்கையும் ஆத்திர உணர்ச்சியையும் தவிர்த்துக் கொள்ளவும் உடலைப்பேணவும்

கும்பம்: இதயம் இன்பத்தால் விம்மும் இல்லத்தில் இனிமை தவழும் உறவினர் மத்தியில் செல்வாக்கு உயரும் பேச்சு இனிமையுமுண்டு.

மீனம்: அவசரகோலம் சிக்கலைத் தோற்றுவிக்கும் மனதில் விரக்திநிலை தென்படும் சகோதர வழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை
குவேந்திரன்

## வட்டு. கிழக்கில் பொலிஸ்-மக்கள் தொடர்புச் சபை

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை கிழக்கு கிராமோதய சபைப் பகுதியில் பொலிஸ் - பொது மக்கள் தொடர்புச்சபையொன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை கிழக்கு கிராம சேவை அலுவலர் திரு ஆ. முருகேசு தலைமையில் அவரது அலுவலகத்தில் நடைபெற்ற இச்சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தலைவராக திரு. ச. கார்த்திகேசுவும், செயலாளராகசைவப் புலவர் திரு. நா. க. தங்கரத்தினமும் தெரிவுசெய்யப்பட்டனர். திருவாளர்கள் கே. முருகேசம்பிள்ளை, அ ரகுநாதன், வே. மாணிக்கம், வ. நாகேந்திரம், எஸ் தட்சணாமூர்த்தி ஆகியோர் சபையின் உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## ரூ. 3 1/2 லட்சம் கடத்தல் பொருட்கள் சிக்கின

(சுண்டிக்குளி)

வல்வெட்டித்துறை பொலிசார் இந்தியாவுக்கு கடத்த இருந்ததாக மூன்று லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான காற்சட்டை ''சிப்'' கட்டுகளை கைப்பற்றி, யாழ் சுங்கத் திணைக்களத்தில் ஒப்படைத்துள்ளனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## யாருடையது?

மண்டைதீவைச் சேர்ந்த எஸ். ஏ. தயாளன் என்பவர் அல்வாயைச் சேர்ந்த ஆர். கிருஷ்ணராஜன் என்பவரின் அடையாள அட்டையைக் கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் தகுந்த அத்தாட்சிகாட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## வலி வடக்கில் 10 லட்சம் வீட்டுத்திட்டம்

(மாவிட்டபுரம்)

பிரதமர் பிரேமதாசாவின் 10 லட்சம் வீட்டுத்திட்டம் வலி. வடக்கில் தேசிய கொடி ஏற்றலுடன் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற இவ்வைபவத்தின் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மகாதேவா தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். இப்பகுதி கிராமசேவை அலுவலர்கள் விசேடசேவை உத்தியோகத்தர்கள், பொதுநல சேவா சங்கங்களின் பிரதிநிதிகள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

யாழ். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை கணக்காளர் திரு. செல்லத்துரை வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான முதலாவது வீடமைப்புக்காக மயிலிட்டி வடக்கு கிராம சேவையாளர் பிரிவைச்சேர்ந்த சுப்பர் கார்த்திகேசுவுக்கு 3,000 ரூபாவிற்கான காசோலையை கையளித்து இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (வெ)



## லண்டன் பயணம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்து சீர்காழி என அழைக்கப்படும் மா. யோகேஸ்வரன் உயர் கல்வி கற்பதற்காக சென்ற மாதம் 30-ம் திகதி லண்டன் பயணமானார். இவர் அங்கு ஒரு வருடகாலம் உயர் கல்வியை மேற்கொள்வார்.

## தெ.ஆசியமானவபரிஷத்

(யாழ்ப்பாணம்)

தென்ஆசிய மானவ பரிஷத்தின் தசாவரா பரிஷத், எதிர் வரும் 14ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ரைவதி மன்னுவாதி தினத்தை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் அனுஷ்டிக்கவிருக்கிறது.

'தீட்சை உபதேசிக்கப்பட்ட வரலாறு' என்னும் விஷயம் பற்றி கலந்துரையாடல் வைபவத்தில் முக்கிய இடம்பெறும்.

## தேயிலை

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

உலக சந்தைக்கு 22 வீத தேயிலையை ஏற்றுமதி செய்யும் இலங்கை தேயிலையின் இந்த விலை அதிகரிப்பால் பெருமளவு நன்மையடையும் என்று நம்பப்படுகிறது. (கு)


1984-ல் உங்கள் தேவைகள் எதுவானாலும்

அம்பலவாணர் அன் சன்ஸ், யாழ்ப்பாணம்

வடமாநிலத்தின் ஏகவினியோகஸ்தர்கள்

மெற்றுலிக்ஸ் கொம்பாஸ்

STANDARD — 45 00 SUPER — 49 00

★ பாடசாலை மாணவர்களின் நலனைமுன்னிட்டு இவ்வாண்டின் மொத்த உற்பத்தியில் 5% யாழ்ப்பாணத்தில் எம்மிடம் கையிருப்பிலுள்ளது.

தேசிய கடதாசிக் கூட்டுஸ்தாபனத்தின், அங்கீகரிக்கப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் - கலர்பெட்டிகள் - கலர் பென்சில்கள், அனைத்து பாடசாலை உபகரணங்களும் நியாய விலையில் எம்மிடம் பெறலாம்.

யாழ்மாவட்ட வியாபாரிகள், அனைவருக்கும் விசேட கழிவு வழங்கப்படும்.

★ மொத்த சில்லறை வியாபாரிகள், அங்கீகரிக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன ஏக விநியோகஸ்தர்கள்.

அம்பலவாணர் அன் சன்ஸ்

196, கே. கே. எஸ். வீதி, - யாழ்ப்பாணம்.

போன்: 24291 தந்தி "வாணர் சன்ஸ்"


## கல்வி புகட்டும் பெரும் பணியாற்றிய பெரியார்

[மரனிப்பாய்]

''அமரர் திரு. சி. இராசரத்தினம் [அப்பு மாஸ்டர்] நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியிலும். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் பணி புரிந்து மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதில் முன்னின்றுழைத்தார். அவர் இளைப்பாறியபின்னரும் இப்பகுதி மாணவ, மாணவிருக்குக் கணிதத்தையும், ஆங்கிலத்தையும் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக இலவசமாகப் புகட்டி இக்கிராமத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்தார். நல்லாசானாக, நற்பணியாற்றிய திரு சி இராசரத்தினத்தின் பணி இப்பகுதி மக்களால் என்றும் நினைவுபடுத்தப்படும் ஒரு பேராக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கவேண்டியதில்லை என வீமன்காமம் தெல்லிப்பழையில் ஆசிரியராக இருந்து இளைப்பாறிய திரு. சி. இராசரத்தினத்தின் மறைவுகுறித்து இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி பி. சச்சிதானந்தம் ஆற்றியஇரங்கலுரையில் குறிப்பிட்டார்.

'அமரரான அப்புமாஸ்டர் ஆசிரியராகப் பணியாற்றியதுடன், இப்பகுதி ப நோ. கூட்டுறவுச் சங்கக்கிளைத்தலைவராகவும் இருந்தும் தனது அறுபத்தொன்பதாவது வயது வரை மாணவர்களுக்குக் கணிதம், ஆங்கிலம் போன்றபாடங்களைப் புகட்டி நல்லதொரு ஆசிரியராகவும், பொதுநலத் தொண்டராகவும் விளங்கியமை இளம் சந்ததியினருக்கொரு முன்மாதிரி'' என அஞ்சலி உரை நிகழ்த்திய அதிபர் திரு. ந. சிவபாதம் குறிப்பிட்டார்.

இவ்வஞ்சலிக் கூட்டத்தில் அமரரின் அரிய சேவைகளைப் பாராட்டி ஆசிரியர்கள் திரு. க சாம்பமூர்த்தி, திரு. எஸ். கிருபைராசா ஆகியோரும் பேசினர்.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
5—1—84 வரை
ஜெமினி — பத்மினி
அன்னை வேளாங்கண்ணி

ராணி (யாழ். நகர்)
Daily 10-30 a.m. 2-30, 4-30, 7-00 p. m. only
Warriers
[adults only]
அடுத்து
எதிரொலி

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
அரங்கு நிறைந்த மகத்தான 3-வது மகளிர் வாரம்
சிவகுமார் - ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
ஆனந்தராகம்
(கலர்)
இசை: இளையராஜா

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-45, 7-15, 9-30
Dee Wallace - Patrick Macnee
in
"The Howling"
Adults only
நீண்ட நாட்களின்பின் மயிர்கூச்செறியும் மர்ம திகில் படத்தை கண்டு களிக்க அரிய சந்தர்ப்பம்

ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-00
5-1-84 வியாழன் முதல் பல முயற்சிகளின் பின் இத்திரைவிருந்து திரையிடப்படுகிறது இதுவே கடைசித் தடவையாக காண்பிக்கப்படுகிறது. குறிப்பிட்ட தினங்களுக்கு மட்டும்.
சிவாஜி—நாகேஷ்
சௌகார்— நிர்மலா
பேபி ஸ்ரீதேவி (முதல் தடவையாக நடித்த)



பாபு (புதிய பிரதி)
வெள்ளிவிழாச்சித்திரம்

## புதிய யாழ். மாவட்ட நீதிபதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதியாக சிரேஷ்ட நீதிபதி திரு. ரி. சுந்தரலிங்கம் இம் மாதம் முதல் பதவியேற்றுள்ளார்.

யாழ். மாவட்ட நீதிபதியாக விருந்த திரு. ஜேசுரத்தினம் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதியாக இடமாற்றம் பெற்றுள்ளதைத் தொடர்ந்தே யாழ். மாவட்ட நீதிபதியாக திரு சுந்தரலிங்கம் பதவியேற்றுள்ளார். இவர் கடந்த சில மாதங்களாக யாழ். மாவட்ட மேலதிக நீதிபதியாக இருந்து வந்தார். (இ)

மனோகரா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
M.G.R - வாணிஸ்ரீ
தேங்காய் சீனிவாசன்
ஊருக்கு உழைப்பவன்
(புதிய கொப்பி)

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30 மட்டும்
மாதர்களே!
உங்கள்
வேண்டுதலுக்காகவே
ஊரும் உறவும்
மேலும் நீடிக்கப்பட்டுள்ளது
இறுதி நாள் 8-1-84

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00,
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
மூன்றாம் பிறை
(வெள்ளிவிழா சித்திரம்)

லிடோ (யாழ்நகர்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி-சாவித்திரி
காத்திருந்த கண்கள்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-ஸ்ரீதேவி
பைலட் பிரேம்நாத்

றீகல் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15, மாலை 9-00 மணி
நெஞ்சத்தைக்கிள்ளும்
மோகன்
புதுமுகமாக
பூர்ணிமா ஜெயராம்
தனிமரமாக
ராஜேஸ்
கலகலப்புக்கு
கவுண்டமணி
இன்னும் இத்தனைபேர் சேர்ந்தும்
பயணங்கள் முடிவதில்லை
(ஈஸ்மென் கலர்
பொன்விழா காவியம்

## பதவி உயர்வு

(மாவிட்டபுரம்)

வசாவிளான் தபால் நிலைய தபால் அதிபராகக் கடமையாற்றிய திரு. சி. தர்மராஜன் முதலாம் தர தபால் அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி பழைய மாணவரான இவர் தபால்சேவையில் 23 வருடங்களைப் பூர்த்திசெய்துள்ளார். இவர் ஏற்கனவே பூநகரி, சங்கானை தபால்நிலையங்களில் தபால் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். (வெ)

## குடிநீர்விநியோக திட்டவேலைகள்

(சாவகச்சேரி)

அமெரிக்க உதவித்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி - பருத்தித்துறை தொகுதிகளுக்கான 500 லட்சம் ரூபா குடிநீர் விநியோகிக்கும் திட்டவேலைகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப் படவிருக்கின்றன.

இத்திட்டத்திற்கான, முதல் கட்ட உபகரணங்களும், குழாய்களும் அமெரிக்காவில் இருந்து சாவகச்சேரிக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. இத் திட்டத்தின் நிர்மாணப் பணிகளை, தனியார் நிறுவனம் ஒன்று ஒப்பந்த அடிப்படையில் பொறுப்பேற்றுள்ளது. (வெ)

## பதினைந்து குழாய்க் கிணறு

[மன்னார்]

மன்னார் மாவட்ட கிராமிய ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் உப உணவு பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு வெள்ளாங்குளம் பகுதியில் 15 குழாய்க்கிணறுகள் தோண்டப்படும்.

பதவி வெற்றிடங்கள்

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள 'சேவிஸ் ஸ்ரேசன்'க்கு பின்வரும் வேலையாட்கள் தேவை,

(1) வாகனம் கழுவுபவர்கள்
(2) ஒயில், கிறிஸ் அடிப்பவர்கள்

அனுபவம் உள்ளவர்களுக்கு கவர்ச்சிகரமான சம்பளம்வழங்கப்படும். உடன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

அ. கந்தசாமி,
ஈஸ்வரி அரிவுகாலை - மல்லாகம்

10945

## தர்மப்பணம் கட்டாதவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்றத் தீர்ப்பின்படி தர்மப்பணம் கட்டாமல் 6 மாதமாக கடத்தி வந்ததாக கூறப்படும் சந்தேக நபர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப் பட்டார்.

நீர்வேலி தாக்குதல் வழக்கொன்றில் 5 எதிரிகளில் மூவர் 50 ரூபாவும், இருவர் 100 ரூபாவும் தர்மத்திற்கு செலுத்த வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப் பட்டது. இவர்கள் 6 மாதமாக இப்பணத்தை செலுத்தவில்லை.

சன்னாகம் பொலிசார் சந்தேக நபர்களில் ஒருவரான பாலச்சந்திரனை கைது செய்து நேற்று யாழ். நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில்ஆஜர் செய்து போது நீதவான் சந்தேக நபரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். மற்றும் 4 சந்தேக நபர்களை பொலிசார்தேடிவருகின்றனர்' (க)

## ரூபவாஹினியில் இன்று

மாலை


| | |
|---|---|
| 6-00 | நாட்டுவளம் (சிங்களம்) |
| 6-05 | ஜெர்மனிய விளையாட்டுகள் |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | வனப்பாதுகாப்புப் பற்றிய நிகழ்ச்சி(சிங்களம்) |
| 7-45 | இசை நிகழ்ச்சி (சிங்களம்) |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | குறுந்திரைப்படம் (சிங்களம்) |
| 9-05 | இசை நிகழ்ச்சி |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | ஆங்கிலத் திரைப் படம் |
| 10-40 | உலகச் செய்தித்தலையங்கங்கள் |
| 11-45 | நிகழ்ச்சிகள் முடிவு. |

## ஓராண்டு நினைவஞ்சலி

திரு. பிலிப்பு தோமஸ் அல்பிறட்
(பாக்கியராசா)

மலர்வு:
21-12-1944

உதிர்வு:
4-01-1983



ஓராண்டு சென்றபின்பும்
மண்ணிற்களித்த நின்
நற்சேவை எண்ணுங்கால்
அகத்தோடு அங்கமும்
களிக்குதே - நின்பிரிவால்
மிகத்துயரமாகுதே காண்

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள், சகோதரர், உறவினர்.

4-ம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

[10963]

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ இல. ஈடு: 3967

இராமலிங்கம் துரையப்பா மகள் இந்துமதி
அச்சுவேலி — வழக்காளி

எதிராக

காசியர் நடராசா, ஆவரங்கால், — எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு இல; 3967ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த நீதிமன்றத்தின் கட்டளைப்படி பின்னால்விபரிக்கப்படும் காணி 1984ம் ஆண்டு ஜனவரிமாதம் 27ந் திகதி (27-01-84) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிக்கு ரூபா 18,000/-மும் மேலும் ரூபா 10,000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 24 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1980ம் ஆண்டு மார்கழி மாதம் 4ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1982ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ந் திகதி வரையுமான வட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும், வழக்குச் செலவு ரூபா 4461-98 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 2281-48, நடைபெறவேண்டிய செலவு ரூபா 1004-75, மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 1175-75) கொடுத்தல்வேண்டும்.

### குறித்த ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர்க் கோவிற்பற்று ஆவரங்கால் இறை குஞ்சகுளாவத்தையும் இளமாலையும் நில. பர. 31 1/2 கிணறும். இந்தப்பரப்பு முப்பத்தொண்டரைக்கும் எல்லை-கிழக்கு நல்லதம்பி வேலுப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்களும் ஒழுங்கை முகப்பும்; வடக்கு கந்தையா மாணிக்கவாசகருக்குரிய ஆதனம்; மேற்கு வேலுப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள்; தெற்கு முத்தர் வீரக்கோனின் ஆதனம், இதடங்களிற் சொரியலாய் 1/9 பங்கும் குறித்த கிணற்றிலே இதற்குரிய பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும்.

பிரான்சிஸ் ஜோக்கிம்
நீதிமன்ற விற்பனைக் கமிஷனரும், விலைமதிப்பாளரும்.

''பதுவை'', பண்டத்தரிப்பு.
03-01-1984 — 10961

Personal Classes for
G. C. E- (A/L) 1984 PURE/APPLIED
இன்று பகல் நேர வகுப்பு ஆரம்பம்: [புதிய பகுதிகள்]

8-00: நீர்நிலையியல்
9-00: வட்டம்

10-30: வட்ட இயக்கம்
11-30: பரப்பும் கனஅளவும்

ஆசிரியர் ரவிமோகன் தற்பொழுது வகுப்பை நடாத்தும் புதிய முகவரி:
74, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி பெருமாள் கோவில் இடையில்)

TUTOR:
RAVIMOHAN

(10923)

# யாழ். பல்கலைக்கழக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர். அச்சமயம் குளிர்பானம் வழங்கப்பட்டபோது அவர்கள் அருந்த மறுத்துவிட்டனர்.

தங்கள் சகோதர மாணவர்கள் தொடர்ந்தும் உண்ணாவிரதம் இருக்கும்போது தாங்கள் மட்டும் குளிர்பானம் அருந்துவது தமிழ் இன மரபுக்கு மாறானது என்றும், ஒருவர் பசித்திருக்க இன்னொருவன் புசித்திருப்பது தமிழ் மகனின் பண்பாடல்ல என்றும் மருத்துவ பீட மாணவர் தலைவர் திரு வி. வினகுமார் கவலையுடன் தெரிவித்தார்.

உண்ணாவிரதமிருந்த களைப்பினால் மருத்துவபீட மாணவர்கள் தங்கள் வகுப்புகளுக்கு நேற்றுச் செல்லவில்லை.

2ம் வருட விஞ்ஞானபீட மாணவர்கள் தவிர மற்றைய பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று வகுப்புகளுக்குச் சமுகமளித்திருந்தனர்.

உண்ணாவிரதம் நடைபெறும் சிவன் கோவில் முன்றலிலும் வெளியிலும் அநேக மாணவர்களும் பொதுமக்களும் பெற்றோர்களும் அமைதியாக இருந்தனர்.

வழக்கம்போல ஒலிப் பதிவு செய்யப்பட்ட தமிழ் பக்திப் பாடல்கள் மெதுவாக ஒலித்துக்கொண்டிருந்தன.

## கல்பகேக்கு மகஜர்

இடம்பெயர்ந்த பல்கலைக் கழகத் தமிழ் மாணவர் ஒன்றியம், உயர் கல்வி அமைச்சின் செயலாளரும், பல்கலைக்கழக மானியக் குழுத் தலைவருமான கலாநிதி ஸ்டான்லி கல்பகேக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மகஜரில், மட்டக்களப்புப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற 40 சிங்கள மாணவர்களை பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றம்செய்ததைக் குறிப்பிட்டு, 18-9-83ல் யாழ்ப்பாணத்துக்கு கலாநிதி வருகைதந்தபொழுது இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு அளித்த வாக்குறுதியையும் நினைவுபடுத்தியுள்ளனர்.

மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''18-9-83 அன்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த பொழுது 77ம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து எந்த வித பாதிப்புக்குமுள்ளாகாமலிருந்த 500 சிங்கள மாணவர்களைத் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் செய்தீர்கள். ஏன் எங்களையும் வடக்குக் கிழக்குப் பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் செய்யக்கூடாது? என்று கேட்டோம். அதற்கு, அக்கால கட்டத்தில்தாம் அதிகாரத்தில் இருக்கவில்லை என்றும், அப்படி இருந்திருந்தாலும் சிங்கள மாணவர்களை இடமாற்றம் செய்திருக்க மாட்டேன் என்றும், மட்டக்களப்புப் பல்கலைக் கழகக் கல்லூரியிலிருந்தும் சிங்கள மாணவர்கள் இடமாற்றம் கேட்கிறார்கள்; எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்ய மாட்டேனென்றும் வாக்குறுதி அளித்திருந்தீர்கள். இப்பொழுது மட்டக்களப்புப் பல்கலைக் கழகக் கல்லூரியிலிருந்து சகல சிங்கள மாணவர்களும் இடமாற்றம் செய்யப்பட்டதை அறிந்து மிகவும் கவலையடைந்துள்ளோம்.

''அதேநேரம் இடம்பெயர்ந்த தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள் விஷயத்திலும் பாரபட்சமில்லாது நீதி வழங்க வேண்டும்''

## ஏன் இந்தப் பாரபட்சம்?

மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரியில் கல்வி பயின்ற சிங்கள மாணவர்களை இடமாற்றம்செய்த அரசு பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தபல்கலைக் கழகத் தமிழ் மாணவர்களை ஏன் இடமாற்றம்செய்யக்கூடாதென்று கேட்டு யாழ். பல்கலைக் கழக மாணவர் அவைத் தலைவர் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''தற்போது மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரியில் கல்வி பயின்ற 40 சிங்கள மாணவர்களைப் பேராதனைப்பல்கலைக் கழகத்திற்கு மாற்ற முடிந்த அரசு இடம்பெயர்ந்த தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களை ஏன் வடக்குக் கிழக்குக்கு மாற்றித்தரத் தயங்குகிறது? எங்களுக்கு இந்தநாட்டில்எந்தெந்த வழிகளில் உரிமைகள் மறுக்கப்படுகின்றனஎன்பதை இன்னும் புரிந்துகொள்ளாத தமிழ் மக்களுக்கு இது ஒரு பெரிய பாடமாக அமையுமென நாம் கருதுகின்றோம்.''

## பார்த்தசாரதிக்கு தந்தி

உண்ணாவிரதம் இருந்துவரும் இடம் பெயர்ந்த பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்கள், இலங்கைத் தமிழர் பிரச்னைகள் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடாத்தவந்திருக்கும் இந்தியப் பிரதமரின் சிறப்புத் தூதுவர் திரு ஜி பார்த்தசாரதிக்கும் தந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்

தமிழ் மாணவர்களின் அடிப்படைப் பிரச்னைகள் மறுக்கப்பட்டுள்ளது என்றும், உடனடியாக இது சம்பந்தமாக அரசுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அத்தந்தியில் கேட்டுள்ளனர்.

இலங்கையிலிருக்கும் இந்தி

## மரண அறிவித்தல்

### திருமதி நாகலட்சுமி ராசசிங்கம்

(உரும்பிராய்)

உரும்பிராய் தெற்கு நாகலட்சுமி ராசசிங்கம் 4-1-84 இல் காலமானார், இவர் காலஞ்சென்ற விதானை கந்தையா, பரிபூரணம் கந்தையாவின் மகளும், மனேஜிங் பாட்னர், கண்டா எக்ஸ்பிரஸ் முத்தையா ராசசிங்கத்தின் (மேவின்) அன்பு மனைவியும், மோகன்ராஜ், சாமிளா ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்னலட்சுமி நவரட்ணம், தங்கலட்சுமி குமாரசாமி, காலஞ்சென்ற ராஜலட்சுமி மதியாபரணம், யோகலட்சுமி லோகநாதன், பூபாலசிங்கம், காலஞ்சென்ற தனையசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருவிளங்கம் ரட்ணமலர், பரிபூரணம் சுப்பையா, தனலட்சுமி சண்முகராஜா, அருந்ததி பரராசசிங்கம், புனிதவதி வேலாயுதம், தவமலர் பூபாலசிங்கம், சந்திரசேகரம் தர்மராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற முத்தையா சிவபாக்கியம் ஆகியோரின் மருமகளும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 5-1-84 வியாழன் காலை 10-00 மணிக்கு உரும்பிராய் வேம்பன் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். 10962

## கூட்டணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைத் தமிழர் பிரச்னை, சர்வகட்சி மகாநாடு தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரனுடனும், தி மு க. தலைவர் திரு. மு கருணாநிதியுடனும் நேற்றுக் காலை நீண்டநேரம் ஆலோசனை நடத்தினர்.

தமிழ் நாட்டிலுள்ள கல்வி நிலையங்களில் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு அனுமதியளித்தமைக்காக தமிழ் நாடு அரசுக்கு திரு அமிர்தலிங்கம் நன்றி தெரிவித்தார்

கூட்டணித் தலைவர்கள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

விமான நிலையத்தில் இவர்கள் தொடர்பான நடவடிக்கைகளை இரகசியப்பொலிசாரே கையாண்டனர்.

திரு பார்த்தசாரதியைச் சந்தித்த பின்னரே அறிக்கை எதுவும் வெளியிடுவதாக திரு அமிர்தலிங்கம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நிருபரொருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இதே நேரத்தில் பெயர் வெளியிடப்படாத ஓரிடத்தில் நேற்று மாலை கூட்டணித் தலைவர்கள், திரு ஜி. பார்த்தசாரதியுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பாதுகாப்புக் காரணங்களினால் கூட்டணித் தலைவர்கள் கொழும்பில் தங்கியிருக்கும் இடம்பற்றிய விபரம் இரகசியமாகவே வைக்கப்பட்டது.

## மதத் தலைவர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டகை சுவீடன்பெர்ணாண்டோ, திருமலை - மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை உட்பட மற்றும் மெதடிஸ்த, அங்கிலிக்கன் திருச்சபை குருமாருக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

## நாளைய சந்திப்பு

சர்வகட்சி மகாநாடுதொடர்பாக சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் குழுவினருடன் நாளை காலை ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனா கலந்துரையாடவுள்ளார். [வெ]

யத்தூதுவருடாக திரு. பார்த்தசாரதிக்கு இத்தந்தி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## தஹாவுக்கு நன்றி

தங்கள் போராட்டத்துக்கு அனுதாபமும் ஆதரவும் தெரிவித்து தந்தி அனுப்பிய காலி எம் பி. கலாநிதி டபிள்யு தஹநாயக்காவுக்கு, நன்றி தெரிவித்து தந்தி ஒன்றை அனுப்பியுள்ளனர்.

## நான்கு இளைஞர்களும் விடுதலை

இடம் பெயர்ந்த தமிழ் பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவா சுவரொட்டி, துண்டுப்பிரசுரங்களுடன் கைது செய்யப்பட்ட சமநீதிஇயக்கத்தைச் சேர்ந்த நான்கு இளைஞர்களும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்

கடந்த 2ம் திகதி காலை 11-45 மணியளவில் யாழ் நகரில் ஸ்ரான்லி வீதியில் சமநீதி இயக்க உறுப்பினர்களான நால்வரும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தனர். அப்பொழுது அவ்வழியால் வந்த ஆயுதப்படையினரால் நால்வரும் கைதுசெய்து யாழ் பொலிசில் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களுடன் சமநீதி இயக்கச் செயலாளர் டாக்டர் அ. சாந்தகுமாரும் ஒருவராவார். தாம் நேற்றுக்காலையும், மற்றைய மூவர் கைது செய்யப்பட்ட அன்றைய தினமும் விடுதலை செய்யப்பட்டதாக செயலாளர் தெரிவித்தார் (மா)

## இப்படியும் நடக்கிறது

கொழும்பிலுள்ள பிரபல கண் வைத்திய நிபுணர்கள் குழு ஒன்று நாடெங்கும் சென்று, கண் நோயாளர்களைப் பரிசோதனை செய்து இலவசமாகக் கண்ணாடிகளையும் வழங்கி வந்தது.

இதற்கான நிதி உதவி, வெளிநாட்டு நிறுவனமொன்றிடமிருந்து கிடைத்தது.

கடந்தவருடம் ஜனவரிமாதத்தில் இக்குழுவினர் வடக்கே வந்து, கண்நோயாளர்களைப்பரிசோதனை செய்துதிரும்பினர்

ஜூலையில் கலவரம் மூண்டதன் எதிரொலி; பரிசோதனை பெற்றவர்களுக்கு இலவசக் கண்ணாடி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

இதற்குப் பின்னர் என்ன நடந்தது?

வடக்கே சென்று கண்ணாடி வழங்கமுடியாது என்றும், மூக்குக் கண்ணாடிகளுக்குரிய ஆயிரக்கணக்கான நிதிஉதவியை பொலன்நறுவ மாவட்டத்துக்குத் திசை திருப்புமாறும் கோருவதென்று மேற்படி குழுவினர் முடிவு செய்தனர்.

எப்படியோ இந்தத் திரை மறைவு நாடகம், யாழ் டாக்டர்களுக்கு மட்டுமின்றி யாழ் ரோட்டரி கண்ணிலும் விழுந்துவிட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள மேற்படி சமூக நிறுவனமும். டாக்டர்களும் அந்த வெளிநாட்டு நிதி நிறுவனத்துடன் அவசரம் அவசரமாகத் தொடர்புகொண்டனர். ''நாங்களே இலவசமாகப் பரிசோதனை செய்து மூக்குக் கண்ணாடிகளையும் வழங்குகின்றோம்'' என்று எழுதினர் இதற்குப் பிரபல கண் வைத்திய நிபுணரின் ஆலோசனையும் அங்கீகாரமும் கிடைத்தது இதன் பயனாக அந்த வெளிநாட்டு நிறுவனம் பூரண நம்பிக்கை வைத்து, நிதியையும் இங்கு வாரி வழங்கிவிட்டது!

கண்ணாடிக் கதை எப்படி?

'ஊடுருவி'

## பாதிக்கப்பட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இழந்தவர்களுக்கும் முதலிடமும், திருமணமாகாத பெண்களுக்கும், விதவைகளுக்கும் இரண்டாம் இடமும் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள வெற்றிடங்களுக்கு இவர்கள் மாற்றப்படுவர்.

## துரித கடுகதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சேவை வாரத்தில் மூன்று நாட்கள் நடைபெறும். காலை 5-15க்கு புறப்படும் ரயில் நண்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாணத்தைச் சென்றடையும். பகல் 1 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு மாலை 7- 5க்கு கோட்டை வந்தடையும்.

ஞாயிறு, புதன், வெள்ளி ஆகிய தினங்களிலேயே இந்தச் சேவை நடைபெறும்.

இரண்டு நாட்களுக்கொரு தடவை தற்போது நடைபெறும் ரயில் சேவை தொடர்ந்து இருக்கும். (இ-கு)

## மட்டு.பல்கலைக்கழக ..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் தெரிவித்தார்.

நேற்றுக்காலை செங்கலடி சந்தியிலிருந்து 200க்கு மேற்பட்ட மாணவர்கள் வந்தாறுமூலை பல்கலைக் கழகக் கல்லூரியை நோக்கி மௌன ஊர்வலம் நடத்தினர்,

ஊர்வலம் முடிந்ததும் பல்கலைக் கழக கல்லூரித் தலைவரிடம் மகஜர் ஒன்றையும் மாணவர்கள் கையளித்தனர்

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

''பாதுகாப்போடு பிரச்னையில்லாயலிருந்த சிங்கள மாணவர்களை இங்கிருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு மாற்றியதுபோல், பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த தமிழ் மாணவர்களை வடக்கு-கிழக்குப் பல்கலைக்கழகங்களுக்கு மாற்ற வேண்டும்''

இப்போராட்டங்களை மாணவர்கள் நடாத்தியபோதிலும் பின்போடப்பட்டிருந்த பரீட்சை இம்மாதம் 16ம் திகதி நடைபெறவுள்ளதால் அதில் தோற்ற முடிவு செய்துள்ளதாக மாணவர் அவைத்தலைவர் தெரிவித்தார். (மா)

## மே. ஜெர்மனியில் இறந்த இலங்கையர்!

(கொழும்பு)

மேற்குஜெர்மனி தீயில் சிக்கி மாண்ட இலங்கையர் பெயர் விபரம்:

ராஜசிங்கம் ஜீவகுமாரன்

கிருஷ்ணபிள்ளை வேலாயுதபிள்ளை

குழந்தை கோபாலு திருநாவுக்கரசு

இந்த விபரத்தை மேற்கு ஜெர்மனியிலுள்ள இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது. இவர்கள் மூவரும் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

## நீதிமன்றத்தில் நால்வர் சரண்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்ற தீர்ப்பின்படி நீர்வேலி தாக்குதல் வழக்கில், தருமப்பணம் செலுத்தாத நான்கு சந்தேகநபர்கள் நேற்று நீதிமன்றத்தில் சரணடைந்தனர். இவர்கள் நால்வரும் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே சந்தேக நபர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

## அடையாள அணிவகுப்பு

(யாழ்ப்பாணம்)

நம்பிக்கை மோசடி புகார் தொடர்பாக பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இப் புகார் தொடர்பான அடையாள அணிவகுப்பு யாழ். நீதிமன்றத்தில் நாளை நடைபெறவிருக்கிறது. (க)

## சென்னை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பட்சத்தில் கூட்டணி கலந்துகொள்ளும் என்றும் திரு. அமிர்தலிங்கம் மேலும் தெரிவித்தார்.

## சிவா கருத்து

''தமிழர் கூட்டணி உத்தேச சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்டால் என்ன, கலந்துகொள்ளாவிட்டால் என்ன, நான் இலங்கையில்தான் தங்கியிருப்பேன்'' என்று திரு. சிவசிதம்பரம் கூறினார்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம், [illegible] 1984-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under Number B 100236/81. Eelanadu- P. O.Box: 49,Telephone: 22389 — 24126.